Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருகையின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 64 உம்மை என் முழு இருதயத்தோடும் துதிப்பேன் சங்.138:1 ஜூலை 2018 No.7

தேவனை தேட நமது இருதயங்களை சாய்த்தல்

Setting our hearts to seek God

"தேவனாகிய ஆண்டவரைத் தேட என் முகத்தை அவருக்கு நேராக்கி....." தானி.9:3 என்று தானியேல் கூறினான்.

"ஆண்டவரைத் தேட முகத்தை நேராக்குவது" என்பது அனேகக் கிறிஸ்தவர்கள் அறியாத ஒரு அனுபவம். ஆனால் தானியேல் அவ்வாறு செய்யக் காரணம் அவனது தீர்மானம், தீவிரம், இருதயத்தின் ஆழத்திலுள்ள ஆர்வம் ஆகியவையே.

இந்த அனுபவத்தை அறியாம லிருப்பது துக்கமானது. தேவனுக்கு நேராக நமது உற்சாகம் குன்றி காணப் படுகிறது. அவர் நம்மை அளவில்லாமல் நேசிக்கிறவர். ஆனால் அவருக்கு நேராக நமது அன்பு ஆழமற்றிருக்கிறது. தேவன் விரும்புவதற்கும், எதிர்பார்ப்பதற்கும் எதிராக நம் மனநிலை காணப்படுகிறது. தேவ காரியங்களில் உற்சாகமின்றி காணப்படுகிறோம். பரத்துக்குரிய காரியங்களை உதாசீனம் பண்ணு கிறோம். "இப்பூவில் என்னைக் கவரும் அனேக பொருட்கள் இருக்கின்றன. எனக்குச் சமயமில்லை. தேவனுக்கு நேராக என் முகத்தை நேராக்காதபடி பற்பல வேலைகளில் நான் ஈடுபட்டிருக் கிறேன்" என்பது போன்ற மனநிலையில் வாழ்கிறோம்.

"நீங்கள் கிறிஸ்துவுடனே கூட எழுந்ததுண்டானால் கிறிஸ்து தேவனு டைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள், பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்" கொலோ.3:1-2. "தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்" எபி.11:6. "பிள்ளைகளே வந்து எனக்குச் செவி கொடுங்கள்" சங்.34:11; "..... என் முகத்தைத் தேடுங்கள் என்று சொன்னீரே" சங்.27:8.

"தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார்" யாக். 4:8. தேவனிடத்தில் சேருவது ஒரு விலையேறப்பெற்ற உடைமை. தேவனைப் பிரியப்படுத்தி வாழும் ஒரு பரிசுத்தவானை எதுவும் தனக்கு நேராக சாய்க்க முடியாது. தேவனைக் கிட்டிச் சேருகிறவர்கள் தேவன்மேல் பசிதாகமுள்ளவர்களாகவும் அவருடைய நீதி பரிசுத்தம் ஆகியவற்றை நாடுகிறவர்களுமாயிருந்தனர்.

"தேவனே, நீர் என்னுடைய தேவன், அதிகாலமே உம்மைத் தேடுகிறேன்..... என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது" சங்.63:1. சங்கீதக் காரனின் ஆவல் எத்தனை மேன்மை யானது! தேவனிடத்தில் கிட்டிச் சேருவதும், அவரை அறிவதும் அவரது ஆவல். இந்தத் தாகமும், பசியும் நமக்கும் வேண்டும்.

A.W. Tozer "நாம் தேவனை நாடுவதற்கான காரணம் அவரைத் தேடும் உந்துதலை அவர் முன்பு நம்மில் தந்திருக்கிறார்" என்று எழுதுகிறார்.

தானியேலிடம் இந்த உந்துதல் மிக அதிக அளவில் காணப்பட்டது. தேவனை நாடுவதும் அவரைக் கிட்டிச் சேருவதும் எத்தனை மகிமையும் விலையேறப்பெற்றதுமான அனுபவம். நாம் கர்த்தருக்குச் சொந்தமானவர் களானால் அவர்மேல் நமது வாஞ்சை அதிக மதிகமாகப் பெருக கெஞ்சி வேண்டுவது அவசியம்.

தேவன் அக்கரை கொள்ளும் ஜெபம்

தானியேல் சொல்லும்போது 'எனது முகத்தை தேவனாகிய கர்த்தருக்கு நேராக்கினேன்' என்கிறார். தேவனுக்கு முன்பாக வரும்போது இருதயம் சரியான நிலையிலிருப்பது அவசியம்.

தேவ வசனம், நாம் அவரது சிங்காசனத்துக்கு முன்பாக வரும்போது கருத்தோடும், பயபக்தியோடும் நல்ல மனநிலையோடும் வரும்படி நம்மை அழைக்கிறது. ஆனால் நாமோ நிர்விசார மாகவும் ஆழமற்ற நிலையிலும் ஜெபிக்கி றோம். கேட்பதற்கு நன்றாயிருக்க சில வார்த்தைகளைச் சொல்லி ஜெபிக்கிறோ மல்லவா!

உத்தமமற்ற ஜெபத்தை தேவன் புறக்கணிக்கிறார். அத்தகைய ஜெபத் திற்கு அவர் செவியை அடைத்துக் கொள் வார். சில வகையான ஜெபங்களை அவர் வெறுக்கிறார்.

தேவன் எத்தகைய ஜெபத் திற்குப் பதிலளிக்கிறார்? சங்.102:17-ன் படி "திக்கற்றவர்களுடைய ஜெபத்தை அசட்டை பண்ணாமல், அவர்கள் ஜெபத்தை அங்கீகரிப்பார்."

திக்கற்றோர் என்பது தேவை யுள்ள ஏழைகளைக் குறிக்கிறது. நாம் அவரை வெறும் கைகளோடு வெட்க மின்றி நமது தேவையை திறந்து அறிக்கையிடும்போது அவர் நமது ஜெபத்தில் பிரியப்படுகிறார். தங்கள் தேவையை அறிந்த பிள்ளைகளை தேவன் நேசிக்கிறார். தன் தேவையையும் ஏழ்மையையும் உணரும் பிள்ளை களுக்கு அவர் செவி கொடுப்பார்.

நமது தேசத்தில் கிறிஸ்தவர் களாகிய நாம் ஆவிக்குரிய தேவையிலி ருக்கிறோம். ஆனால் நாம் தேவையைப் பெற்றுக் கொள்ளவும், தேவனுக்கு நேராக நமது முகத்தைத் திருப்பவும் கடினமாயிருக்கிறது.

ஆனால் நாம் நமது முகத்தை ஆண்டவராகிய தேவனுக்கு நேராகவே திருப்ப வேண்டும். நாம் நமது காலத்தை நமக்குக் கவர்ச்சியாகத் தோன்றும் காரியங்களுக்காகச் செலவிடுகிறோம். நமது மனதிற்கு எளிதான காரியங்களான தொலைக்காட்சி, உல்லாசப் பயணங்கள், விருப்புச் செயல்கள், நண்பர்களின் சந்திப்பு, அதிக பொருளீட்டுதல் மற்றும் சபையில் செய்யும் சேவை ஆகியவற்றிற் காகச் செலவிட்டு தேவனுக்கு நேராகத் திரும்புவதால் கிடைக்கும் சந்தோ ஷத்தை இழந்துவிடுகிறோம்.

சபையின் பணிவிடை நல்லது தான். ஆனால் மனிதன் இருதயத்தை தேவனுக்குக் கொடுக்காமல் அவரை சேவிக்க அவர் எதிர்பார்க்கவில்லை. முதலாவது அவரை சரியாக அறிந்து கொண்டு அவரை சேவிக்கும் வாய்ப்பைப் பெற வேண்டும்.

நமது வாழ்வின் நோக்கம் தேவன். ஆனால் தேவனை நாம் உண்மையாக அறியவில்லை என்பதை மறைப்பதற் காக அவரது சேவையை பயன்படுத்து கிறோம். தேவனோடுள்ள நெருங்கிய தொடர்பு, அவரைப்பற்றிய அறிவு ஆகியவை இல்லாமல் சேவையை ஒரு மூடுதிரையாக பயன்படுத்துகிறோம்.

இவ்வுலக வாழ்வில் நமது தேட்டம் அவராகவே இருக்க வேண்டும். அப்படி அவரை நமக்குச் சொந்தமாகக் கொண்டிருக்கும்போது எப்போதும், எங்கேயும், எப்படியும், எதற்காகவும் அவரது விருப்பப்படி நாம் பயன் படுத்தப் பட முடியும். எனவே அவரை அறிந்து கொள்வது முதன்மையானது. பின்பு அவர் நடத்துகிறபடி அவரை சேவிக்கலாம்.

(3-ம் பக்கம் பார்க்க)

வருகை யின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

முகவரி: வருகையின் தூதன் நியுபோர்ட் தெரு, நாகர்கோவில் - 629 001
Mobile: 95432 21008 **e.mail:** varukayinthoothan@hotmail.com

Advisory Board : T. Peter, D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

வாக்குத்தத்தம்

ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய். *சங்கீதம் 50:15*

வாசகருக்கு என் அன்பு கிழிதம்

கீறிஸ்துவுக்குள் பரிசுத்தவான்களும் விசுவாசிகளுமாயிருக்கிற சகோதரர்களுக்கு எழுதுகிறதாவது:

நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

ஜூலை மாத பத்திரிக்கைக்காக என் தேவனை நன்றியோடும், தாழ்மையுடனும் துதிக்கிறேன். 2018-ம் ஆண்டின் ஆறு மாதங்களை கடந்து 7-வது மாதத்திற்குள் பிரவேசிக்கவும், ஆறு உபவாச கூடுகைகளை நடத்தவும் தேவன் இரங்கினபடியால் மனப்பூர்வமாய் மகிமைப்படுத்துகிறேன்.

வருந்துகிறேன்

வருகையின் தூதன் பத்திரிகை உங்கள் கரங்களில் காலதாமதமாக வந்து சேருவதற்காக அடியேன் எனது வருத்தத்தை தெரிவித்துக்கொள்கிறேன். அன்பான வாசகர் இந்த பத்திரிகையை ஆவலோடு எதிர்பார்ப்பதற்காக அடிமை ஆண்டவரை துதிக்கிறேன்.

மும்பை உபவாச ஜெபத்திற்கு போகிறதற்கு முன்பாகவே ஆசிரியர் கடிதம் எழுதப்பட்டு அச்சிடப்பட ஆயத்தமாகிவிட்டது. ஆனால் அச்சிட மனதில்லாமல் மும்பை புறப்பட்டுச் சென்றோம். மும்பை உபவாச ஜெபம் முடிந்து, அந்த அறிக்கையை தனியாகவே எழுதிகொடுத்தேன்; ஆனால் அச்சு பணி செய்கிறவர்கள் அதையும் அழகாக ஆசிரியர் கடிதத்தில் இணைத்துவிட்டார்கள். எப்படியும் முதல் முதலாவதாக மேய் மாத பத்திரிகை காலதாமதமானது.

ஜூன் மாத பத்திரிகையை அச்சிட்டு, மிகுந்த சிரமங்களோடே தபால் அலுவலகத்தில் சேர்த்தோம்; ஆனால் பத்திரிகை தபால் அலுவலகத்திலேயே இருக்கிறது என்று எனக்கு அறிவிக்கப்பட்டது. உங்களில் சிலர் பத்திரிகை கிடைக்கவில்லை என்றும், பின்பு கிடைத்தது என்றும் போன் பண்ணினீர்கள், கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

ஜூலை மாத பத்திரிகை, ஜூன் மாதம் 18-ம் தியதிதான் அச்சுபணிக்கு அனுப்பப்படுகிறது. காலதாமதமானால் தயவுசெய்து பொறுத்துக்கொள்ளுங்கள்.

நம்முடைய உபவாச ஜெபங்களை தேவன் கிருபையாய் மிகவும் ஆசீர்வதிக்கிறார். அதற்காக ஆண்டவருக்கே மகிமை செலுத்துகிறோம். தஞ்சை உபவாச ஜெபத்தை நீங்கள் www.youtube.com | Heart cry for Revival | Fasting prayer | Rev. Wesley Devadason | Part 1 & part 2-ல் பார்க்கலாம். ஜெபிக்கிற, தாங்குகிற அனைவருக்கும் எங்கள் நன்றியை தெரிவிக்கிறோம். தொடர்ந்து ஊக்கமாய் ஜெபிக்கும்படி உங்களை மிகவும் பணிவாய் கேட்கிறேன்.

எழுப்புதலுக்காக இதய கதறல் 2018

மாதம்	தேதி	இடம்
ஜூலை	21-07-2018 3-வது சனி	டவுன் ஹால், கடலூர், கடலூர்
ஆகஸ்ட்	18-08-2018 3-வது சனி	விசுவாச ஜெப சபை, கல்லக்குறிச்சி, விழுப்புரம்
செப்டம்பர்	15-09-2018 3-வது சனி	அசெம்பிளி ஆப் காட் சபை, தேனீ
அக்டோபர்	18-10-2018 3-வது வியாழன்	அந்தமான்
நவம்பர்	17-11-2018 3-வது சனி	திருவனந்தபுரம்
டிசம்பர்	01-12-2018 1-வது சனி	விக்டரி அசெம்பிளி ஆப் காட் சபை, வடக்கன்குளம், நெல்லை மாவட்டம்.

தரிசனம் 2019 - Vision 2019

ஆண்டவருக்குச் சித்தமானால் *(யாக்கோபு 4:15) 2019*-ம் ஆண்டு, **எழுப்புதலுக்காக இதய கதறல்**

உயிர்மீட்சிக்காக 7 மணி நேர உபவாச ஜெபத்திற்கு, உங்கள் சபை கட்டடத்தை ஒரே ஒரு விசை திறந்து தருவீர்களா? தொடர்புக்கு: **94897 40295**

எழுப்புதலுக்காக இதய கதறல் 2019

மாதம்	தேதி	இடம்
ஜனவரி	19.01.2019 3-வது சனி	பிலதெல்பியா சபை கோயம்பத்தூர் - 5
பெப்ரவரி	16.02.2019 3-வது சனி	CSI கிறிஸ்து சபை தெற்கு தாமரைகுளம், குமரி
மார்ச்		
ஏப்ரல்		
மே		
ஜூன்		
ஜூலை		
ஆகஸ்ட்		குஜராத்
செப்டம்பர்		
அக்டோபர்		
நவம்பர்		
டிசம்பர்		

உபவாச ஜெபங்களுக்காய் ஜெபிக்கும்போது தயவு செய்து கீழ்காணும் 7 குறிப்புகளை மனதில் வைத்து ஜெபியுங்கள்.

1. ஆவியின் மாரி: அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள்.

ஊழியக்காரர் மேலும் ஊழியக்காரிகள் மேலும், அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன் யோவேல் 2:28,29.

இந்த வாக்குத்தத்தம் "பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது" (அப்.2:1) நிறைவேறினதை படிக்கிறோம்.

அப்பொழுது பேதுரு..... நீங்கள் நினைக்கிறபடி இவர்கள் வெறிகொண்டவர்களல்ல, ...தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது ..... என்றான் அப்.2:14-36.

சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்னால் பெய்தது "முன்மாரி", தேவ மக்களாகிய நாம் எதிர்பார்ப்பது "பின்மாரி".

இதுவரைக்கும் "இந்தோனேஷியாவில் எழுப்புதல்", "வேல்ஸ் நாட்டில் எழுப்புதல்", கொரியாவில் எழுப்புதல்", "செவ்விந்தியர் மத்தியில் எழுப்புதல்" என்றே கேள்விப்பட்டு பிரசங்கித்தும் வருகிறோம்; இந்தியாவில் எழுப்புதல் எங்கே?

எழுப்புதலின் வித்துக்கள் தாழ்மையுள்ள இருதயங்களில் தான் முளைக்கும். ஏனென்றால் தேவன் தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார் யாக்கோபு 4:6.

என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத்

(7-ம் பக்கம் பார்க்க)

கடிதங்கள், காணிக்கை, ஜெப விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியுபோர்ட் தெரு, நாகர்கோவில் - 629 001
VARUKAYIN THOOTHAN
Newport Street, Nagercoil-629 001.
Mobile: 95432 21008
email:
Varukayinthoothan@hotmail.com

வங்கி கணக்கு எண்

VARUKAYIN THOOTHAN
A/c. No.:431521036
Indian Bank,
W.C.C. Road, Nagercoil-1
IFS Code : IDIB000N006

வங்கி வழியாக பணம் அனுப்பினால், தொலைபேசி, ஈமெயில், SMS வழியாக உடனே எங்களுக்கு தெரிவியுங்கள்

கடைசி நாட்களில் மனந்திரும்புதலும் எழுப்புதலும்

Repentance and revival in the Last days

Rich Carmicheal

மத்.24:3-12 வசனங்களில் இயேசுவின் வருகை இறுதிநாட்கள் இவற்றைக் குறித்து இயேசு எச்சரிப்பதை வாசிக்கிறோம். இவைகளெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம் என்று கூறிவிட்டு "இவைகள் சம்பவிக்கத் தொடங்கும் போது, உங்கள் மீட்பு சமீபமாயிருப்பதால் நீங்கள் நிமிர்ந்து பார்த்து உங்கள் தலைகளை உயர்த்துங்கள் என்றார்" லூக்.21:28.

இன்று நம்மை சுற்றி நடை பெறும் சம்பவங்கள், "எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று" 1 பே.4:7 என காண்பிக்கின்றன. இந்நாட்கள் நல்லொழுக்க சீர்கேடுகளும், நாடுகளின் விரோதங்களும், இயற்கைப் பேரழிவுகளும், பொருளாதார நெருக்கடிகளும் மற்றும் நிச்சயமின்மை, பயம் ஆகியவை நிறைந்தவைகளுமாயிருக்கின்றன. அதிகக் குழப்பங்களும் அழுத்தங்களும் தேச பிரிவினைகளும் உயர்ந்து வருகின்றன. எனவே தேவ பிள்ளைகள் விழிப்புடன் செயல்பட வேண்டிய காலம் இது!

ஆனால் சில கிறிஸ்தவர்கள் எந்தத் தாக்கத்தையும் மக்களில் தங்களால் ஏற்படுத்த முடியாது என்கின்றனர். ஏனெனில் உலகம் சபை ஆகியவை இப்படியேதான் போய்க்கொண்டிருப்பதால் இரட்சிப்புக்கும், எழுப்புதலுக்கும் இடமில்லை என்கிறார்கள். எனவே காலத்தை ஆதாயப்படுத்திக் கொள்வதற்குப் பதிலாக உலக முடிவை எதிர்பார்க்கின்றனர்.

இந்நிலையில் இயேசு வரும் வரை அமைதியாயிருப்பது சரியா?

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பலியையல்ல இரக்கத்தையும், தகன பலிகளைப் பார்க்கிலும் தேவனை அறிகிற அறிவையும் விரும்புகிறேன் ஓசி.6:6. லூக்.10:41-42 வசனங்களில் அவருடைய சேவையில் களைத்துப் போன மார்த்தாளை இதமாகக் கண்டித்த இயேசு நல்ல பங்கைத் தெரிந்து கொண்ட மரியாளைப் புகழ்ந்தார்.

பிதாதமக்கு அருளினவர்களைக் குறித்து பிதாவிடம் அவர்கள் ஒரே மெய்யான தேவனையும் அவர் அனுப்பிய அவரது குமாரனாகிய இயேசுக் கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன் என்று ஜெபித்தார். நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளுகிறவர்கள் பிதாவை அறிந்திருக்க வேண்டும். "ஒன்றான மெய்த் தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பின வராகிய இயேசுக் கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்."

தானியேல் கூறினது போல "தேவனாகிய ஆண்டவரை ..... தேட என் முகத்தை அவருக்கு நேராக்கினேன்" என்று கூறுவோமா?

அல்லது இழந்து போன ஆத்துமாக்கள் மத்தியிலும் சபையிலும் ஒரு எழுப்புதல் ஏற்படக்கூடுமா? தனிப்பட்டதும், கூட்டமானதுமான எழுப்புதல் ஏற்படும் நம்பிக்கை உண்டா?

நியாயத்தீர்ப்பு அல்லது எழுப்புதல்

நினிவே மக்களின் அக்கிரமம் கொடிதானபோது ஆண்டவர் யோனா தீர்க்கதரிசியை அங்கு அனுப்பி, "இன்னும் நாற்பது நாட்களில் நினிவே கவிழ்க்கப்பட்டுப்போடும்" என்று அறிவிக்கக் கட்டளையிட்டார் யோனா.3:4. அது உண்மை. தண்டனை நியாயமானது; ஆனால் ஜனங்கள் தேவனை விசுவாசித்து எச்சரிப்பை உணர்ந்து தங்களைத் தாழ்த்தி ஜெபித்து மனந்திரும்பினார்கள் (3:5-9). "தேவன் அவர்களது கிரியைகளைப் பார்த்து, தாம் அவர்களுக்குச் செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக் குறித்து மனஸ்தாபப் பட்டு அதைச் செய்யாதிருந்தார்" 3:10.

தேவனது இருதயம் பொல்லாதவர்களை குற்றஞ்சாட்டுவது அல்ல, அவர்களை மனந்திருப்புதலுக்கும், இரட்சிப்புக்கும் நடத்தும் யோனாவை நினிவேக்கு அனுப்பி வரப்போகிற அழிவை அறிவித்து மக்களுக்கு எச்சரிப்பை அளித்து அவர்கள் நியாயத் தீர்ப்புக்கு தப்பிக்கொள்ள ஒரு தருணம் அளித்தார். அவர் அழிவை விரும்பாமல் மனந்திரும்புதலை விரும்புகிறவர்.

தேவன் தாம் சிருஷ்டித்த அனைத்து சிருஷ்டிகள் மீதும் கரிசனையுள்ளவர். குறிப்பாக தமது ரூபத்தின்படி தமது சாயலிலே சிருஷ்டிக்கப்பட்ட மனிதனை அவர் நேசிக்கிறார். அவர் இரட்சகர்.1 தீமோ.2:4-ன் படி "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்" அவர் பாவியின் மரணத்தை விரும்புகிறவரல்ல, பாவிகள் மனந்திரும்ப அவர் அழைக் கிறார். அவர் தயவு, பொறுமை, நீடிய சாந்தம் இவைகளில் ஐசுவரிய முடையவர். எனவே அவர்களை மனந்திரும்ப அழைக்கிறார். ஒரு பாவியின் மனந்திரும்புதலால் பரலோகில் மிகுந்த சந்தோஷம் உண்டாகும் லூக்.15:7,10. இவ்வாறு மனந்திரும்புதலுக்கு வாய்ப்பளிக்க அவரது இரண்டாம் வருகை தாமதிப்பதாக அப்போஸ்தலன் குறிப்பிடுகிறார் 2 பே.3:8-9 வாசிக்க.

ஊழியம் செய்ய ஏற்ற காலம் இது

நமக்கு எவ்வளவு சமயம் தேவை? நினிவே மக்களுக்கு 40 நாட்கள் கொடுக்கப்பட்டது. ஆயினும் பல்லாயிரக்கணக்கான மக்கள் மனந்திரும்ப போதுமான சமயமிருந்தது. அதற்கு ஒரு தீர்க்கதரிசி உத்தமமாக தேவ செய்தியைக் கூற வேண்டியதாயிருந்தது.

கடைசி நேரத்திலே கர்த்தர் யோனாவைக் கொண்டு வல்லமையாக செயல்பட்டதுபோல உலகின் இக் கடைசி நாட்களிலே தேவன் நம்மைக் கொண்டு செயல்பட முடியும்1 பே.4:7-11 படிக்க.

காலம் சமீபம் என்பதை பேதுரு ஊழியத்தின் முக்கியத்துவத்தோடு தொடர்புபடுத்துகிறார். உலகத்தின் முடிவு சமீபமாயிருப்பதால், ஜாக்கிரதையுள்ளவர்களாகவும், ஆவியில் அனலுள்ளவர்களாகவும், ஜெபத்தில் தரித்திருக்கிறவர்களாகவும், அன்பில் அனலுள்ளவர்களாகவும், ஊழியத்தில் உண்மையுள்ளவர்களாகவும், தேவ வசனத்தை அறிவிப்பதில் வாஞ்சையுடையவர்களாகவும் இருக்க வேண்டும். நாள் நெருங்க நெருங்க ஊழியம் குறையாமல் பெருக வேண்டும். இயேசு வரும் வரை, முழு மனதோடு அவரது பணியைச் செய்ய வேண்டும். உலகம் சுவிசேஷத்தை எதிர்பார்க்கிறது. "இராஜ்யத்தின் சுவிசேஷம் உலகமெங்கும் பிரசங்கிக்கப்பட வேண்டிய காலம் இது" மத்.24:14. கோணலும் மாறுபாடுமான சந்ததியின் மத்தியில் ஜீவ வசனத்தைப் பிடித்துக் கொண்டு சுடர்களைப் போல நாம் பிரகாசிக்க வேண்டும் பிலி.2:15-16. ஆகையால் நீங்கள் ஞானமற்றவர்களைப் போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப் போல கவனமாய் நடந்து கொள்ளப்பார்த்து, நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்" எபே.5:15-16.

இக்கடைசி நாட்களில் தேவ பிள்ளைகள் தூயவாழ்வு, உத்தம ஜெபம், தேவ அன்பை வெளிப்படுத்துதல், தேவ வசனத்தைப் பகிருதல் ஆகியவற்றிலும் தேவ பெலனைப் பெற்றுக்கொள்வதிலும், ஊழியத்திற்கான அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்வதிலும் கருத்தாயிருந்தால் தேவன் நம்மூலமாகப் பெரிய காரியங்களைச் செய்ய முடியும். நமது குடும்பங்களிலும், நண்பர்களிடமும், அயலகத்தாரிடமும், நமது தேசத்திலும் கூட பெரிய காரியங்கள் நடைபெறும்.

தேவனது வல்லமையும் அவரது வசனமும் அளவற்ற சக்தியுடையவை. அவர் துன்மார்க்கரின் பட்டணமாகிய நினிவேயை ஒரு மனிதனுடைய பிரசங்கத்தால் மாற்றியமைத்தார். அவர் அனேக விலையேறிய ஆத்துமாக்களையும் உங்களையும் இரட்சித்து எழுப்பு தலடையச் செய்ய வல்லவர். இன்றும் உத்தமமான பிரசங்கிமாரை அவர் தேடிக் கொண்டிருக்கிறார். அவர்கள் உத்தம மன்றாட்டு வீரர்களாயிருந்து இரட்சிப்புக்கும் எழுப்புதலுக்கும் மக்களை ஆயத்தம் பண்ண வேண்டும்.

இம்மாத பொன்னான சிந்தனை

ஒரு மனிதன் மரிக்கும்போது தன் ஆஸ்தியை விட்டுச் செல்கிறான்; ஒரு தேவபிள்ளை மரிக்கும் போது தன் ஆஸ்தியினிடத்திற்கு செல்கிறான்.

(மத்தேயு 6:19-21)

எழுப்புதலுக்காக விசுவாசத்தோடு ஜெபியுங்கள்

Pray in faith for revival

W.C. Moore

'உன் விசுவாசத்தின்படியே உனக்கு ஆகக்கடவது' மத்.9:29. இது இயேசுவின் வாக்கு. யோசுவாவும் காலேபும் விசுவாசித்தபடியால் வாக்குத் தத்த நாட்டில் பிரவேசித்தனர். இந்நாடு பாலும் தேனும் ஓடுகிற கானான். அனைத்து இஸ்ரவேலருக்கும் இது வாக்குப்பண்ணப்பட்டாலும் அவிசு வாசத்தால் ஏராளமானவர்கள் அதில் பிரவேசிக்கவில்லை.

யோசுவாவும் காலேபும் தேவனோடு நெருங்கிய தொடர்புடைய வர்களாயிருந்தனர். அவர்கள் தேவனை விசுவாசித்து அவரைப் பின்பற்றின படியால் காலம் வந்தபோது கானானுக் குள் பிரவேசித்தனர். தேவன் வாக்குப் பண்ணியதை நிறைவேற்றுவார் என்ற உறுதி அவர்களுக்கிருந்தது. அவர்களது உள்ளமும், இருதயமும் சூழ்நிலை களைப் பாராமல் தேவன் மேலேயே பற்றுதலாயிருந்தது. அவர்கள் தேவனை விசுவாசித்து, முற்றிலுமாக அவரைப் பின்பற்றினர்.

மேல்வீட்டறையில் காத்திருந்து ஜெபித்த 120 பேரும் பரத்திலிருந்து வரும் வல்லமையால் தரிப்பிக்கப்படும் வரை தேவனுக்கு உத்தமமாகக் காத் திருந்து பெந்தெகொஸ்தே அனுபவத் தைப் பெற்றனர். இன்றும் ஜனங்கள் விசுவாசத்தோடு பலத்த எழுப்புதலுக் காகக் காத்திருக்கின்றனர். நமது ஆண்டவர் நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர். இன்றும் எழுப்பு தலைக் கட்டளையிட அவரால் கூடும்.

1900 ஆண்டுகளில் வேல்ஸில் ஏற்பட்ட பெரிய எழுப்புதலால் உலக நாடுகளிலுள்ள மக்கள் புதிய விசுவாசத் தால் நிரப்பப்பட்டனர். ஏராளமானோர் இதற்காகப் பல மாதங்கள் ஜெபித்தனர். லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் எழுப்புதல் ஏற்படக் காரணமாயிருந்தவர் **பார்ட்டில்மான்.** அவர், "என் இருதயத்தில் எழுப்புதலுக்காக மிகப் பெரிய பாரம் ஏற்பட்டது. 'வேல்ஸில் எழுப்புதலும் ஆவியானவரும்' என்ற புத்தகத்தைப் படித்தபோது என்னில் அக்கினி பற்றி எரிய ஆரம்பித்தது. எழுப்புதலின் ஆவி என்னைப் பட் சித்தது....." என்று குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்து அவர் ஜெபக்கூடுகைகள் குறித்தும் தேவனுக்காக வாஞ்சையுடையவர்களாய் பிறரையும் ஜெபிக்க வைக்க வேண்டும், பெலத்த எழுப்புதலைத் தேவன் தருவார் என்று விசுவாசிக்க வேண்டும் என்கிறார்.

தேவ ஆவியானவர் இப்போது எழுப்புதலுக்காக ஜெபிக்க அனேகரைத் தூண்டிக் கொண்டிருக்கிறார். நாம் தூய ஆவியானவரின் நடத்துதலைப் பின்பற்றி விசுவாசத்தோடு ஜெபிப்போம். ஒருவருக்காக ஒருவர் அனுதினமும் ஜெபிப்போம். இக்கடைசி நாட்களில் தேவனுடைய பலத்த கிரியை நடப்பிக் கப்பட உழைப்போம், ஜெபிப்போம், விசுவாசிப்போம்.

அனைத்துத் தடைகளையும், கஷ்டங்களையும், தாமதங்களையும் மேற்கொண்டு தீர்மானத்தோடு தேவனை விசுவாசித்து தூய ஆவியான வரின் எழுப்புதலுக்காக ஜெபிப்போம்.

விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவரும் இயேசு. அனேகர் முற்காலங்களில் ஜெபித்தார்கள். இப்போது நாம் ஏன் ஜெபிக்கக்கூடாது. தேவன் உத்தமர். அவரது வாக்குகள் உறுதியானவை. சூழ்நிலைகள் கடினமா யிருந்தாலும் தேவனுடைய வாக்குகள் மாறாதவை.

தேவனை நேசிக்கிறவர்களும் அவரை விசுவாசிக்கிறவர்களும் வேண்டும். யோசுவாவும் காலேபும் விசுவாசித்து வாக்குத்தத்த நாட்டைப் பெற்றனர். நாம் விவாதங்களில் ஈடு படாமல் இணைந்து ஆவியின் மாரிக்காக ஜெபிப்போம் சக.10:1. நாம் ஒருவரோ டொருவர் அன்பாயிருந்து தேவன் பலத்த தூய ஆவியின் எழுப்புதலை அனுப்பும்படியாகவும் அதன் மூலம் நாம் ஒன்றாக இணைந்து செயல்படவும் தேவனை நோக்கி ஜெபிப்போம் யோவா.17:20-23.

தேவன் எழுப்புதலுக்காக ஆயத்தம் பண்ணுகிறார்

God prepares for Revival

D. Colin Jones

மரித்த கிறிஸ்தவம் நேர்மையற்ற செயலை மரியாதையாக எடுத்துக் கொள்கிறது. மார்க்கம் மரித்துவிட்டால் அதற்கு ஏற்படுவது விருப்பமற்ற ஒரு வாசனை. ஆனால் கிறிஸ்தவம் உயிருட னிருந்தால் அது நறுமணம் வீசுவதால் மக்கள் அதைப் பெற்றுக் கொள்ள விரும்புவார்கள். ஒவ்வொரு காலகட்டத் திலும் தேவன் மரித்தது போன்ற நிலையிலுள்ள தமது ஜனங்களின் மத்தியில் அசைவாடி அவர்களில் ஜீவனைக் கொண்டு வந்திருக்கிறார். இதுவே எழுப்புதல். பழைய ஏற்பாட் டின் காலத்தில் எழுப்புதல் ஏற்பட்ட துண்டு. சாமுவேலின் வாழ்விலும் இதனைக் காணலாம்.

I சாமுவேல் முதலாம் அதிகாரம்

எல்க்கானா, அன்னா, பெனின்னா, ஏலி ஆகிய நான்கு பேரை இங்கு காணலாம். எல்க்கானா தேவ பயமுள்ள மனிதன். அவனுக்கு இரு மனைவிகள். இருவரும் கணவரால் நேசிக்கப்ப ட்டனர். ஆனால் பெனின்னாளுக்குப் பிள்ளைகள் இருந்தது. அன்னாளோ மலடியாயிருந்தாள். பிள்ளையற்ற அன்னாளின் ஆழமான தேவை உணர்வு அவளது இருதயத்தில் எழுப்புதலை ஏற்படுத்தியது. எழுப்புதல் ஏற்படுவதற்கு 20 ஆண்டுகளுக்கு முன்னால் ஆண்டவர் இந்த தேவபக்தியுள்ள அன்னாளின் இருதயக் கதறலைக் கேட்டு எழுப்பு தலை அனுப்பினார்.

கனியற்ற வாழ்வு: எல்க்கானா அன்னாவை மிகவும் நேசித்தபடியால் அவளுக்கு இரட்டிப்பான பங்கு கொடுப்பான். ஆனால் கர்த்தரோ அவள் கர்ப்பத்தை அடைத்திருந்தார் வச.5. பிள்ளையில்லா திருப்பது எபிரெய பெண்களுக்கு மிகவும் துக்கமானது. ஏனெனில் குடும்பத்தின் எண்ணிக்கையின் அடிப் படையில்தான் ஆசீர்வாதம் கணக்கிடப் பட்டு வந்தது. எனவே தேவை நிறைந்த நிலையில் அவள் அதிக துக்கமுடைய வளாயிருந்தாள். பெனின்னாளும் அவளை விசனப்படுத்தினாள்.

சந்தோஷமற்ற இருதயம்: (8-10 வசனங்களை வாசிக்க) அன்னாள் போய் மனங்கசந்து மிகவும் அழுது கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினாள். இந்த அதிகாரத்தின் முதற்பகுதி சோகம் நிறைந்தது. எல்க்கான ஒரு அன்பான கணவனாக, 'பத்துக் குமாரரைப் பார்க்கி லும் நான் உனக்கு அதிகமல்லவா?' என்று ஆறுதல் சொல்லுவான். அதற்குப் பதில் சொல்ல முடியாத அன்னாள் தனது அன்புக் கணவனின் அரவணைப்பை விட்டு கர்த்தருடைய ஆலயத்திற்கு விரைந்தாள்.

கிறிஸ்துவின் மணவாட்டியாகிய நாம் நமது கனியற்ற நிலைக்காக வருந்து கிறோமா? பல வருடங்களாக மக்கள் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற வில்லை. நாம் அங்குமிங்குமாக ஓடி உழைக்கிறோம். ஆனால் இருதயத்தைக் கிழித்து ஏறெடுக்கும் ஜெபம் இல்லையே.

நமது கனியற்ற நிலையை உணர்ந்து தேவனிடம் வராவிட்டால் உண்மையான வேத அடிப்படையிலான எழுப்புதலை நாம் காணமுடியாது. போலியான தற்கால எழுப்புதல் மட்டுமே காணப்படும். தேவனுக்கான தும், ஆத்துமாக்களுக்குமானதுமான துக்கமுள்ள இருதயத்தையும் வாஞ்சை யையும் தேவன் தருவாராக.

சுயநலமற்ற தீர்மானம்: வச.11 இங்கு அவள் ஒரு குழந்தையை கர்த்தருக்காகக் கொடுக்க வாக்களிக்கிறாள். அவள் ஆண்டவருக்குத் தன்னை முற்றிலுமாக

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அடிமைப்படுத்துவது ஒரு அற்புதமான அனுபவம். அந்த விசேஷித்த பொக்கிஷத்தைப் பெற்றுக் கொள்வதற்கு முன்பதாகவே அதை கர்த்தருக்குக் கொடுக்கிறாள். இது உத்தம அர்ப்பணிப்பின் ஒரு காட்சி. அவள் இளவயதுடையவளாயிருந்தும் முற்றிலும் கர்த்தருக்குத் தன்னை ஒப்புவித்துவிட்டாள். இதை வாசிக்கிற பலர் வயது முதிர்ந்தவர்களாயிருக்கலாம். ஆனால் இந்த செய்தி இளவயதுள்ளவர்களை எட்ட வேண்டும். அவர்கள் விரைவில் வரவிருக்கும் கர்த்தரின் வரவுக்குத் தங்களை ஆயத்தப்படுத்தி எழுப்புதலுக்கு முன்னோடிகளாக வரப்போகிற காலங்களை பயன்படுத்தலாம்.

கேள்வி கேட்கமுடியாத ஜெபம்

வச.12-15 ஒரு உத்தம எழுப்புதலின் ஜெபமாக அமைகிறது. 'நான் கர்த்தருடைய சந்நிதியில் என் இருதயத்தை ஊற்றிவிட்டேன்'. 'நம்மைச் சுற்றிலும் வாழும் ஆயிரமாயிரம் மக்கள் கிறிஸ்துவின்றி மரிக்கிறார்கள். இவர்களுக்காக தேவ சமூகத்தில் எவ்வளவு நேரம் வேதனைப்படுகிறோம்? சபை கனியற்றதாயிருக்க இதுவே காரணம். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகுந்த பலனுள்ளது' யாக்.5:16.

சந்தேகமற்ற விசுவாசம்: *வச.18* ''அப்பொழுது அவள் உம்முடைய அடியாளுக்கு உம்முடைய கண்களிலே தயை கிடைக்கக்கடவது என்றாள். பின்பு அந்த ஸ்திரீ புறப்பட்டுப் போய் போஜனம் செய்தாள்; அப்புறம் அவள் துக்கமுகமாய் இருக்கவில்லை. விசுவாசத்தினால் அவளது துக்கம் சந்தோஷமாக மாறியது. தனது ஜனத்திற்கு எழுப்புதலைக் கொண்டு வருமுன் தனது இருதயத்தில் எழுப்புதலைப் பெற்றுக்கொண்டாள். இந்த வசனம் 10-ம் வசனத்துடன் ஒப்பிடப்பட வேண்டும். முன்பு வாழ்வு அவளுக்குக் கடினமாயிருந்தது. இப்போதோ சுற்றிலுமுள்ளவர்களுக்கு சந்தோஷத்தைக் கொடுக்கிறாள். முன்பு அவள் சாப்பிடாமலிருந்தாள்; இப்போது பசியுடையவளாய் ஆகாரம் புசித்தாள். முன்பு அவள் முகம் துக்கமாயிருந்தது. இப்போது கர்த்தரின் மகிழ்ச்சி அவள் முகத்தில் பிரதிபலித்தது. அவள் உத்தம எழுப்புதலைப் பெற்றுக்கொண்டாள். தேசத்தில் எழுப்புதல் ஏற்பட அவள் முன்னோடியானாள்.

சுயாதீனமான ஆராதனை: *வச.19* - "அவர்கள் அதிகாலையில் எழுந்து கர்த்தரைப் பணிந்து கொண்டு ராமாவிலிருக்கிற தங்கள் வீட்டுக்குத் திரும்பிப் போனார்கள்....." அவள் அதிகாலையில் எழுந்து கர்த்தரை நினைத்து அவருக்கு ஆராதனை செய்தாள். தேவனும் அவளை நினைத்து அவளது விண்ணப்பத்திற்குச் செவி கொடுத்தார். ஆராதனையும் உத்தமமும் மிகுந்த தொடர்புடையவை. ஆராதனை தேவனோடுள்ள நெருங்கிய உறவு. அதன் மூலம் கனிகள் உருவாகின்றன. நாம் அவரிடம் சேரும்போது அவர் நம்மிடம் வருகிறார். அப்போது நாம் இழந்துபோன மக்களைத் தேடி அவரண்டை கொண்டு வருவோம். கிருபையின் ஆச்சரியமான வட்டம்! ஆனால் முக்கிய தொடர்பு இருதயத்தில் ஆரம்பிக்கிறது.

அளவில்லாத ஆசீர்வாதம்: *வச.20*

"சிலநாள் சென்றபின் அன்னாள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று கர்த்தரிடத்தில் அவனைக் கேட்டேன் என்று சொல்லி அவனுக்கு சாமுவேல் என்று பேரிட்டாள்" சாமுவேல் பிறந்தான், அவன் மூத்த குமாரன். இந்த ஆசீர்வாதம் ஒரு விசுவாசமுள்ள ஜெபத்தின் மூலம் ஏற்பட்டது.

நிபந்தனையற்ற அர்ப்பணம்: *வச.24-28*

அன்னாள் தான் செய்த தீர்மானத்தை நிறைவேற்றினாள். அவள் தன் பாரத்தை இறக்கிவிட்ட அதே இடத்தில் அதை நிறைவேற்றினாள். அவள் திரும்ப வந்து தனக்கு மிகவும் விலையேறப்பெற்ற பொக்கிஷமாகிய கர்த்தருக்கு அர்ப்பணித்தாள். தேவன் பிள்ளையை ஏற்றுக்கொண்டார். வரும் நாட்களில் அவன் மூலமாக எழுப்புதல் ஏற்படும். அன்னாள் மூலமாக முதலில் எழுப்புதல் ஏற்பட்டது.

அவளது அர்ப்பணம் அவளுக்கு துக்கத்தைக் கொண்டுவரவில்லை. இரண்டாம் அதிகாரத்தில் கடந்துவரும் போது அவள் கர்த்தருக்கு நன்றி கீதம் பாடுவதைக் கேட்டு நாமும் சேர்ந்து கொள்ளலாம். அவள் ஒரு புதிய பெலனையும் தேவனைக் குறித்த புதிய உணர்வையும் பெற்றுக்கொண்டாள்.

தேவனிடமிருந்து நாம் விலகினால் எழுப்புதலின் உலகில் நாம் நுழைய முடியாது.

அர்ப்பணம் எப்போதும் சந்தோஷத்தைத் தரும். உங்களை அது தேவன் பயன்படுத்த விரும்பும் எதிர்கால திட்டத்தில் நிறுத்தும்.

காங்கோ (ஸையர்) 1953

The Congo (Zaire) 1953

பெல்ஜியன் காங்கோவில் மிஷனெறிப் பணியாற்றிய டேவிட் டேவிஸ் என்பவரது அனுபவத்திலிருந்து எடுக்கப்பட்டது. *1953*-ல் எழுப்புதல் ஏற்பட்டபோது அவர் அங்கிருந்தார். பின்பு அவரும் மனைவியும் *1964* ஸிம்பா புரட்சியின் போது வீட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். விடுதலை பெற்ற பின் டேவிட்டும் மனைவி ஆனியும் தென் வேல்ஸிலுள்ள ஸ்வாம்ஸீ என்ற இடத்திற்குச் சென்றனர்.

தேவன் எழுப்புதலின் வல்லமையோடு வரும்போது நாம் நினைப்பதை விட வித்தியாசமானவைகள் சம்பவிக்கும். எழுப்புதல் என்பது தேவன் தமது பிரசன்னத்துடன் இறங்கி வருவதாகும்.

நான் எங்கள் பகுதியில் தலைமை மிஷனெறியாயிருந்தேன். அங்கு *130* சபைகளிருந்தன. பல்வேறு விதமான கூடுகைகள், மருத்துவப்பணி, பள்ளிப் பணி போன்றவை நடந்து கொண்டிருந்தன. ஆனால் மக்கள் குளிர்ந்த நிலையில் காணப்பட்டனர். ஜெபக்கூடுகைகளுக்கும் வேதபாட பயிற்சிகளுக்கும் வருகை குறைந்தது. மக்கள் மனந்திரும்பி இரட்சிப்பைப் பெற்றிருந்தாலும் ஏதோ குறைவுபட்டது. இந்த அனுபவம் கல்லறையிலிருந்து வெளிவந்த லாசருவைப் போலிருந்தது. அவன் உயிர் பெற்று வெளியே வந்தாலும் கைகளும், கால்களும் துணியால் பொதியப்பட்டிருந்தன.

ஒருவர், மிஷனெறிகள் ஒவ்வொரு மாதமும் ஒரு நாள் முழுவதும் ஜெபத்தில் செலவிடும்படி தூண்டினார். அப்படி ஜெபித்தபோது நாங்கள் தேவனுக்காக எழுந்து பிரகாசிக்கவில்லை எனக் கண்டோம். பிறரோடுள்ள உறவில் குறைவுகளிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அவைகள் சரி செய்யப்பட்டு உள்நாட்டு மிஷனெறிகள் போதகர்கள் அனைவரும் சேர்ந்து ஜெபிக்க ஆரம்பித்தோம். அது எழுப்புதலல்ல.

உண்மையான எழுப்புதல் நான் பணி செய்த இடத்திற்கு *400* மைல்களுக்கு அப்பால் லுபுட்டு என்ற மிஷன் நிலையத்தில் ஆரம்பித்தது. அன்று ஒரு சனிக்கிழமை, வேதபாட வகுப்பும் ஜெபக்கூடுகையும் நடந்தன. சிறிது நேரம் ஆதித்திருச்சபையில் தேவன் கிரியை செய்ததைக் குறித்து அப்போஸ்தலர் நடபடிகளை மையப்படுத்திக் கற்றுக் கொண்டிருந்தோம். ஒரு போதகர் கண்ணீர்விட்டு அழுதார். அது வழக்கத்திற்கு மாறானது. அவர் தனது இருதய கடினத்தைக் குறித்து பகிர்ந்து கொண்டார். அவரது பாவ உணர்வு கூடுகை முழுவதிலும் பாவ உணர்வை ஏற்படுத்தியது. அனேகர் அழுகையோடும் புலம்பலோடும் பாவங்களை சத்தமாக அறிக்கையிட்டனர். மிஷனெறிகளுக்கு இது தாங்கக்கூடாத அனுபவமாயிருந்தது. எனவே அவர்களை அமைதிப்படுத்த அவர்கள் முயற்சித்தனர். ஆனால் அதிகாலை *2* மணிவரை இந்நிலை நீடித்தது.

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இதைக் குறித்து அனேக கடிதங்கள் மிஷன் நிலையத்திற்கு வந்த வண்ணமிருந்தது. எனது சொந்த சகோதரன் இது அதிக உணர்ச்சிவசத்தால் ஏற்பட்டது எனக் குற்றம் சாட்டினார். அவரும் எழுப்புதலுக்காக ஜெபித்தவர் தான். ஆனால் இதனை அவர் விரும்ப வில்லை. கடின இருதயத்தில் ஊற்றப் பட்ட சூடான இரத்தம் பயனற்றுப் போவதை அவர் தரிசனத்தில் உணர்ந்தார். அதன் பிறகு நடைபெற்ற ஒரு கூடுகையில் இருதய கடினம் அவிசுவாசம் என்றும் அது ஆவியின் அக்கினியை அணைத்துப் போடுகிறது என்பதையும் விவரித்தார். அதேவேளை யில் ஒரு ஆப்பிரிக்கப் பெண்மணி பழைய குப்பைகளெல்லாம் அகற்றப்படு வதை ஒரு தரிசனத்தில் கண்டார். இப்போது தான் கூடுகையில் ஆவி யானவர் ஊற்றப்பட்டார்.

எழுப்புதல் எப்போதும் வித்தி யாசமானது. இது மனிதனால் ஒழுங்கு படுத்தப்படுவது அல்ல. லுபுட்டுவில் எழுப்புதல் ஜனவரி 1953-ல் ஆரம்பித்து மேய் மாதத்தில் என் சகோதரனிருந்த மிஷன் நிலையத்திற்கும் பரவியது. அது 160 மைல் தூரத்திலிருந்தது. ஜூலை மாதம் இன்னும் 260 மைல் தூரத்திலுள்ள வான்பாவிற்குப் பரவியது. இவ்வாறு எழுப்புதல் காட்டுத்தீ போல் பல மிஷன் நிலையங்களுக்குப் பரவியது.

எனது சபை அனுப்பிய சுவிசேஷ கன் பயிற்சி முடித்து லுபுட்டு சென்றி ருந்தான். எழுப்புதலின் நாட்களில் அவன் அங்கிருந்தான். அவன் முதல் ஓய்வுநாளில் யாத்.19:10-11 வசனங்களின் அடிப்படையில் பிரசங்கித்தான். அன்று அவன் எங்களோடிருந்தான். அது ஒரு வல்லமையான செய்தி. விசேஷமாக எதுவும் நடைபெறவில்லை. நான் ஆராதனையை முடித்துவிட்டு ஆலோ சனை தேவைப்படுகிறவர்கள் தங்கள் இடங்களில் அமரும்படி கூறினேன். ஒரு வாலிப ஆசிரியை எனக்கு முன்பாக வந்து அடக்க முடியாமல் அழுது கொண்டிருந் தாள். ஒரு முடமான பெண் 'நான் நரகம் செல்கிறேன், நான் என்ன செய்வது!' என கத்தினாள். வெளியே சென்ற மக்களும் ஓடி உள்ளே வந்தனர். ஒரு வாலிபன் தான் பொறாமையுள்ளவன் என உணர்ந்து மனங்கசந்து அறிக்கையிட்டான்.

உதவிக்காக அழுது கொண்டி ருந்த மக்களுக்கு நான் ஆலோசனை கொடுத்துக் கொண்டிருந்தேன். ஆலயம் முழுவதும் பாவ உணர்வடைந்த மக்களால் நிரம்பியிருந்தது. இறுதியில் அனைவரும் தங்கள் இருதயங்கள் இயேசுவின் இரத்தத்தால் கழுவி சுத்திகரிக்கப்பட்டதையும் பாவ மன்னிப்பைப் பெற்றதையும் அறிக்கை யிட்டனர். அடுத்த நாள் ஒருவருக் கொருவர் மன்னிப்புக் கேட்டு நல்மனம் பொருந்தும் நாளாயிருந்தது.

சுமார் 200 மைல்களுக்கப்பா லிருந்த ஒரு சுவிசேஷகனுக்கு நடந்த வைகளை ஒரு கடிதத்தில் எழுதி அனுப்பினேன். அவர் அதனை தனது சபைக்கு அறிவித்தபோது அங்கும் எழுப்புதல் ஏற்பட்டது. சபைத் தலைவர்களும், ஊழியர்களும், பெண் களும் பள்ளி மாணவர்களும், மாணவி களும் பாவ உணர்வடைந்தனர். மிஷனெறிகளாகிய நாங்கள் இவற்றை கவனித்துக் கொண்டிருந்தோம்.

தேவன் சபையை சுத்திகரித்துக் கொண்டிருந்தார். பல ஆண்டுகளாக தங்கள் பாவங்களை மறைத்து வாழ்ந்த வர்கள் தங்கள் பாவங்களை அறிக்கை யிட்டனர். ஒரு சிறுவன் தான் கடை யிலிருந்து திருடிய ஒரு பொருளைக் குறித்து கடைக்காரனிடம் "இயேசு என் உள்ளத்தில் வந்துவிட்டார். நான் இன்னொரு பாதையில் செல்கிறேன்" என்று கூறி பொருளின் கிரயத்தை அவனிடம் ஒப்படைத்தான். தேவபய மற்ற கடைக்காரன் திகிலடைந்து "இதுவே சரியான பாதை, இதன் வழி யாகச் செல்" என பதிலளித்தான். மிகவும் நல்ல ஊழியம் செய்து சபைகளை ஸ்தாபித்த ஒருவர் சபைக்கு முன்பாக பாவ அறிக்கை செய்தார். அவரது வார்த்தைகள் அனேகரை மனந்திரும்பச் செய்தது. பட்டணம் முழுவதும் தேவனைப் பற்றி பேசப்பட்டது.

பாவ உணர்வுக்கு எதிர்த்து நின்றவர்கள் கடின அனுபவங்களைப் பெற்றனர். ஆனால் பாவத்தை அறிக்கை யிட்டவர்கள் மீது ஆசீர்வாதம் இறங்கியது. சவுல் தர்ஷீசுக்குச் சென்ற பாதையில் அவனைச் சுற்றிலும் ஒளி பிரகாசித்தது போன்ற அனுபவங்களை சிலர் பெற்றனர். மோசே, தாவீது, யோவான் போன்றவர்களைப் போல இரட்சகருக்கு முன்பாக செத்தவர் களைப் போல விழுந்தனர். எழுப்புதல் மூலமாக தூய்மை, இரக்கம், அன்பு, வேதவாசிப்பு, ஜெபம், கிறிஸ்துவை மகிமைப்படுத்துதல் போன்றவை மக்களில் ஏற்பட்டது.

ஜெபக்கூடுகைகளிலும், வேத தியான வகுப்புகளிலும் மக்கள் திரளாய்க் கூடினர். தேவன் அருகிலிருக்கிற உணர்வை மக்கள் பெற்றபடியால் ஒருவருக்கொருவர் மிகவும் அமைதி யாகப் பேசினர். 'நாங்கள் தேவ பிரசன்னத்தால் சூழப்பட்டிருப்பதை உணர்ந்தோம்' என்று ஒரு மிஷனெறி குறிப்பிட்டிருந்தார். தேவபயம் மக்களை நடுங்கச் செய்தது. ஏற்கெனவே வேத வசனத்தை நன்கு படித்திருந்த மக்கள் எழுப்புதலின் மூலம் அதின் மதிப்பை உணர்ந்து கொண்டனர். வேத வசனங்கள் அவர்களது நினைவுக்கு வந்து கொண் டிருந்தது.

எழுப்புதலால் ஏற்பட்ட சீர்திருத் தம் அற்புதமானது. மக்கள் திருடிய பொருட்களை காவல் நிலையத்திற்குக் கொண்டு வந்தனர். அதிர்ச்சியடைந்த ஒரு அதிகாரி எனக்கு இவ்வாறு எழுதினார்: "இவையெல்லாவற்றையும் கையாள என்னால் முடியவில்லை. பொருட்களை மக்கள் உங்கள் மிஷன் நிலையத்திற்கு கொண்டு வரச் சொல்லுங் கள். அவர்கள் கொண்டு வரும் பொருட்களை பெரிய நான்கு சக்கர வண்டியிலேற்றிக் கொண்டு வாருங்கள்." தேவன் ஒளியாயிருக்கிறார். தேவனுடன் ஐக்கியம் கொள்ளுகிறவர்கள் தூய்மை யற்றவர்களாயிருக்க முடியாது.

தேவனால் நேரடியாகக் கொடுக்கப்பட்ட பாடல்கள் எழுதப் பட்டன. மக்கள் அதிகமாக ஜெபிக்க ஆரம்பித்தனர். சுவிசேஷம் அறிவிக்கும் தாகம் அதிகரித்தது. ஆராதனைகள் ஆலயத்திற்கு வெளியேயும் நடத்தப் பட்டன. புறஜாதிகள் தங்கள் கிராமங் களிலும் இவ்வாறு ஆராதனைகள் நடத்த விருப்பம் கொண்டனர்.

நான் எனது நாள் குறிப்பேட்டில் 18 மாதங்கள் இவற்றை எழுதினேன். இன்னும் தேவனுடைய வல்லமை கிரியை செய்து கொண்டிருந்தது. முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு இந்த எழுப்புதலில் பயன்பெற்றவர்கள் ஊழியக் காரர்களாக மாறினர். நியா.2:10-ல் கூறப்பட்டது போல அடுத்த தலை முறையினரையும் வழிவிலகாமல் பாதுகாப்பது அவசியம்.

ஆயினும் நீங்கள் உங்கள் சபையில் எழுப்புதல் ஏற்பட அதற்கு முன்பாக நீங்கள் தனிப்பட்ட வாழ்வில் எழுப்புதலின் மேல் வாஞ்சையுடையவர் களாயிருக்க வேண்டும்.

ஜூலை மாத உபவாச ஜெபம்

Heart cry for Holy Spirit Revival

எழுப்புதலுக்காக இதய கதறல் 2018

(உயிர் மீட்சிக்காக 7 மணி நேர உபவாச ஜெபம்)

காலம் : ***21.07.2018***
3-வது சனிக்கிழமை

சமயம் : காலை 08.00 மணி முதல்
மாலை 03.00 மணி வரை

இடம் : **டவுன் ஹால், கடலூர்**

தொடர்பு : பிஷப் ***B.*** **பால் கிருபாகரன்**
மொபைல் : 9629712330

முக்கிய அறிவிப்பு

வங்கி வழியாக காணிக்கை அனுப்பினால் தயவுசெய்து உடனே எங்களுக்கு தெரிவியுங்கள். இது நீங்கள் எங்களுக்கு செய்யும் பெரிய உதவியாகும்.

எழுப்புதலின் எளிமையான ஆரம்பங்கள்

Humble origins of revival

Sarah Foulkes Moore

"பெந்தேகொஸ்தே நாளிலிருந்து ஏற்பட்ட எந்த எழுப்புதலும் ஒரு சிலருடைய ஐக்ய ஜெபத்தாலேயே ஏற்பட்டுள்ளது. இவை எங்கும் பரவியது மட்டுமின்றி அணைந்து போகவு மில்லை. தேவ பிள்ளைகளின் கூட்டு விசுவாசமும் மன்றாட்டும் தேவ வசனம் எல்லா இடங்களிலும் பரவி தேவநாமம் மகிமைப்பட எழுப்புதல் ஏதுவாயிற்று" என்று A.T. Pieson எழுதியிருக்கிறார்.

எழுப்புதலின் எளிய ஆரம்பம் உதாசீனம் பண்ணப்படலாகாது. சபை சரித்திரத்தைப் படிக்கும்போது தேசத்தில் படர்ந்த அனைத்து எழுப்புதல்களும் எளிமையாகவே ஆரம்பித்துள்ளன. சபையிலும் தேசத்திலும் உலகத்திலும் எழுப்புதல் தேவை என்ற உந்துதல் ஏற்பட்டு ஜெபிக்க ஆரம்பித்த ஒரு சிலரால் எழுப்புதல் ஏற்பட்டுள்ளது. அவர்கள் தங்களை ஆவியானவருக்கு ஒப்படைத்து மன்றாட்டு ஜெபத்தின் மூலம் எழுப்புதலில் நெருப்பு பற்றியெரிய காரணமாயிருந்தனர். அதனால் சபை சுத்திகரிக்கப்பட்டு பாவிகள் மனந்திரும்பினர்.

சபைச் சரித்திரத்தில் எழுப்புதல் ஆரம்பிக்கக் காரணமாயிருந்தது பத்து நாட்களின் ஜெபக்கூடுகை. ஒரு சிறு கூட்டம் மக்கள் எருசலேமில் ஒரு மேல் வீட்டறையில் கூடி ஜெபித்தனர். ஆனால் அவர்கள் இருதயங்கள் இணைந்திருந்தன. அவர்கள் ஏக சிந்தையுடன் ஜெபத்தில் உறுதியாய்த் தரித்திருந்தனர்.

அன்றிலிருந்து இன்றுவரை உத்தம எழுப்புதல் ஒன்றிரண்டு பேரின் ஊக்கமான ஜெபத்தால் எளிமையாக ஆரம்பித்திருப்பதைக் காணலாம். துணிச்சலான சீர்திருத்தவாதிகளான லூதர், ஹஸ் மற்றும் அனேகர் அதிகக் கண்ணீரோடு ஜெபித்ததின் பலனாக மிகப்பெரிய சீர்திருத்தங்கள் ஏற்பட்டன. வெஸ்லி, உவைட்பீல்டு, பார்ன் வெல் மற்றும் அவர்களுடன் கூடிய ஆரம்ப மெதடிஸ்ட் ஜெபவீரர்கள் மூலம் பிரஞ்சு புரட்சியினால் ஏற்பட்ட பயங்கரம் மாறி இங்கிலாந்தின் கடலோரப் பகுதிகள் தேவ ஆவியானவரின் மகிமையான பணியால் நிரப்பப்பட்டன.

ஜாண் நாக்ஸ் என்ற பக்தன் ஸ்காட்லாந்தின் ஆவிக்குரிய தேவைகளை உணர்ந்து வேதனையோடு, '**தேவனே ஸ்காட்லாந்தை எனக்குத் தாரும், இல்லையென்றால் நான் சாகிறேன்**' என்று ஜெபித்தார். அமெரிக்கா பாவச்சேற்றிலே புரண்டு தவித்ததைக் கண்டு D.L. மூடி என்ற பக்தன், 'தேவனே மறுபடியும் அமெரிக்க நகரங்களை தூண்டி எழுப்பும்" என்று ஜெபித்தார். இத்தகைய விசுவாச ஜெப வீரர்கள் தூரக் காட்சியோடு ஜெபிப்பது கிறிஸ்தவ பகுதிகளுக்கு இன்றியமையாதது.

எழுப்புதல்களின் நாள் கடந்து போகவில்லை

தூய ஆவியானவர் நம்மீது ஊற்றப்பட ஆவலாகக் காத்து நிற்கிறார். அதற்காக நாம் நம்மைத் தாழ்த்தி ஜெபிக்க வேண்டும். லூக்.11:13-ன் படி "..... பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா!"

19-ம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் அயர்லாந்தின் நகரங்களில் ஒரு எழுப்புதல் பரவியது. இரண்டு ஆண்டு களாக நான்கு இளைஞர்கள் ஒரு பள்ளிக்கட்டிடத்தில் கூடி இரவும் பகலும் தேவனை அறியாத மக்களின் இரட்சிப்புக்காகப் போராடி ஜெபித்தனர். இவர்களின் ஜெபம் தேசத்தைப் பரிசுத்த பூமியாக மாற்றியது. கூட்டம் கூட்டமாக மக்கள் ஆலயம் செல்ல ஆரம்பித்தனர். கட்டிடங்கள் நிரம்பி வழிந்தன. அனைத்து ஆராதனை களிலும் நூற்றுக்கணக்கானோர் பாவ உணர்வடைந்தனர். வழக்கு மன்றங் களும் சிறைச்சாலைகளும் குற்றவாளி களில்லாததால் அடைக்கப்பட்டன.

1903-ல் வேல்ஸ் தேவபயமற்ற தும் அவபக்தி நிறைந்ததுமாயிருந்தது. 1904-ல் பரலோக எழுப்புதல் அங்கு ஏற்பட்டபோது பரலோக அக்கினி அங்கு பற்றியெரிந்தது. எழுப்புதலுக்காக ஈவான் ராபர்ட்ஸ் பல வருடங்கள் ஜெபித்ததோடு நம்பிக்கையோடு ஜெபிக் கும்படி பலரைத் தூண்டினார். எழுப்பு தல் ஏற்பட்டு நாடு முழுவதும் பரவியது.

இன்று உலகில் காணப்படும் ஆவிக்குரிய வீட்சி, சபைகளிலுள்ள வரட்சி தேசத்திலுள்ள தீமைகள் ஆகியவற்றை பார்க்கும் நாம் எழுப்பு தலின் தேவையை உணர்ந்து தேவன் தமது வல்லமையை விளங்கப் பண்ணும் படியாக இணைந்து ஜெபிப்போம்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தாழ்த்தி, ... இதுதான் தேசம் க்ஷேமம் அடைய முதல் நிபந்தனை, இதை சிந்திக்கிறோமா? 2 நாளாகமம் 7:14.

2. சரியான சபைகள் கீடைக்க: தமிழ்நாட்டில் ஆயிரக்கணக்கில் சபைகள் இருந்தாலும், "எழுப்புதலுக்காக இதய கதறல்" 7 மணி நேர உபவாச ஜெபத்திற்கு தங்கள் சபை கட்டிடத்தை தருவார் இல்லையே! வெளிமாநிலங்களிலும் இவ்வித உபவாச ஜெபத்தை நடத்த வேண்டுமென்ற பாரத்தை தேவன் கிருபையாய் தருவதால், ஆண்டவருக்கு சித்தமானால் 2019-ம் ஆண்டு கோவா, கேரளா, மஹாராஷ்டிரா, குஜராத், கர்நாடகா, ஆந்திரா போன்ற இடங் களுக்காக ஜெபிக்கிறோம். நீங்களும் ஜெபிப்பீர்களா?

3. பிரயாண பாதுகாவல்: ஜூன் மாதம் 8-ம் தியதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு பிரயாணம் செய்ய பிரயாசப் பட்டோம்; ஆனால் வாகனம் மாலை 3.00 மணி அளவில்தான் கிடைத்தது. மாலை 3.45 மணிக்கு புறப்பட்டு அதிகாலை 3.45 மணிக்கு மைசூர் போய் சேர்ந்தோம். வழியில் மழை கொட்டிக் கொண்டி ருந்தது, 28 கொண்டை ஊசி வளைவுகள் (Hair pin bend) இருந்தது. எனது மகனும், வாகனத்துக்கு சொந்தக்காரருமாகிய போதகரும் மாறி மாறி ஓட்டினார்கள். தங்கும் விடுதியில் காலை 4.30 மணி முதல் 7.30 மணி வரை இளைப்பாறினோம்.

சரியாக 9.00 மணிக்கு உபவாச ஜெபம் ஆரம்பமாயிற்று. ஸ்தல போதகர் **மோகன்தாஸ்** அவர்கள் உபவாச ஜெபத்தை நேர்த்தியாய் ஒழுங்குபடுத்தி, பாடல் ஆராதனையுடன் ஆரம்பித்து வைத்தார்

(8-ம் பக்கம் பார்க்க)

தேவன் தமது ஜனத்தின் மத்தியிலிருக்கிறார்

God is in the midst of His people

Rich Owen Roberts

"எழுப்புதல் என்பது தூய ஆவியானவரின் அசாதாரண செயல், அது அசாதாரண விளைவுகளை ஏற்படுத்தும்" என்று ஒரு புத்தகத்தில் நான் எழுதினேன். ஆனால் 'தேவன்' என்ற ஒரே வார்த்தை யில் எழுப்புதல் அடங்கியிருக்கிறது.

எழுப்புதல் என்பது தேவன் தமது ஜனத்தின் மத்தியில் என்ற விலையேறிய சத்தியத்தைக் காண்பிக்கிறது. எழுப்புதல் மூலம் அவரது சமூகம் வெளிப்படுத்தப் படுகிறது. அவரது பிரசன்னம் இல்லா விடில் ஆவிக்குரிய வீழ்ச்சி நிலை ஏற்படுகிறது.

எழுப்புதலின் போது பரலோகம் பூமிக்கு அருகாமையில் இறங்கி வருகிறது. பரலோகத்தின் மிகப்பெரிய கவர்ச்சி, அங்குள்ள பொன்னாலான தெருக்களோ? ஜீவ விருட்சமோ? தூதர் களின் பிரசன்னமோ? மீட்கப்பட்டோ ரின் கூடுகையோ? அல்ல! பரலோகத்தின் மிகப்பெரிய விசேஷம் தேவ பிரசன்னம் அங்கு எப்போதும் தங்கி இருப்பதே.

அதே போல நரகத்தின் மிகப் பெரிய கொடுமை அவியாத அக்கினி யும், சாகாத புழுக்களும், முடிவில்லாத வேதனைகளும் தீமைகளும் காணப் படுமேயன்றி தேவன் ஒருபோதும் அங்கிருப்பதில்லை. கோடிக்கணக்கான ஆண்டுகள் நரகத்திலிருக்கும் ஒரு பாவி தேவன் எப்போதாவது ஒரு நிமிடம் அங்கு வருவார் என்ற நம்பிக்கையைப் பெற முடியாது.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கள். ICRM ஊழியத்தின் ஸ்தாபகர், பாஸ்டர் **ஜாண் R. இளங்கோவன்** அவர்கள் எங்களை மிகவும் அன்புடன் வரவேற்று எங்களுக்காக பாரத்தோடு ஜெபித்தார்கள். ஆவியானவரின் அபிஷேகத்தோடு அளிக்கப்பட்ட செய்திகளை கன்னடத்தில் மொழிபெயர்த்தார்கள். உங்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இதோ ஒரு தேவனுடைய பிள்ளையின் பாடல்:

பனிபோல பெய்யும் பரிசுத்தரே
மழையாக பெய்யும் ஆவியே
ஆவியே ஆவியே
மழையாக பெய்யும் ஆவியே

நமக்கு மிகவும் விருப்பமான, வாஞ்சிக்கிற ஆங்கில பாடல்:

Showers of Blessing
Showers of Blessing we need
Mercy drops round us are falling
But for the showers we plead

தேவன்பின் வெள்ளம்
தேவன்பின் வெள்ளம் தேவை
கொஞ்சம் ருசித்த என் உள்ளம்
கெஞ்சுதே இன்னும் தேவை

4. ஊழியர்களின் சரீர சுகம்: நாகர்கோவில் பட்டணத்தில் நடந்த உபவாச ஜெபத்தின் முந்தின நாள் வரை அடியேன் நன்றாகவே இருந்தேன். காலையில் வீட்டில் யாருக்கும் தெரியாமல் கடுமையான காய்ச்சலினால் நான் படுக்கையில் போராடிக் கொண்டிருந்தேன். எனது மகன் பஸ் நிலையத்தில் வந்து சேர்ந்த சகோதரர்களை உபவாச ஜெபம் நடக்கும் இடத்துக்கு அழைத்து சென்று கொண்டிருந்தான்.

உபவாச ஜெபம் 10 மணிக்கு ஆரம்பமாயிருக்கும், ஆனால் அடிமை படுக்கையில் ஜுரமாய் கிடக்கிறேன். பிறகு மெதுவாக எழும்பி, மெதுவாக நடந்து, மெதுவாக மேடையேறி, மெதுவாக பிரசங்கித்தேன். மாலையில் கைத்தாங்கலாக காரில் வீட்டிற்கு சகோதரர்கள் அழைத்து வந்தார்கள்.

இப்போதும் சில தேவனுடைய ஊழியர்களுக்கு பிரயாணத்திற்கு முன் சரீர பெலவீனம், வியாதி ஏற்படுகிறது. தயவுசெய்து இதற்காகவும் ஜெபிக்கும்படி தாழ்மையாய் கேட்கிறேன்.

5. வீடற்றுப்போகிற குடும்ப உறுப்பினர்கள்: இதைக்குறித்து ஏற்கெனவே அடியேன் எழுதியிருக்கிறேன். வீட்டிலுள்ள ஆண்கள் ஊழியத்திற்கு புறப்பட்டு போகும்போது, வயதான பெற்றோர், மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் மாத்திரமே வீட்டில் இரண்டு அல்லது மூன்று தினங்கள் தனித்து இருப்பார்கள். இதனை நான் விபரமாக எழுத விரும்பவில்லை. அவர்களுடைய பாதுகாவலுக்காகவும், மன அமைதிக்காகவும் ஜெபியுங்கள்.

6. ஊழிய தேவைகள்: ஒவ்வொரு மாதமும் தூதன் ஊழியத்திற்கான தேவைகளை தேவன் கிருபையாய் சந்திக்கும்படி தயவாய் ஜெபியுங்கள். கர்த்தருக்குச் சித்தமானால் வரும் மாதங்களில் இதைக் குறித்து தெளிவாய் எழுதுவேன்.

தற்சமயம் **அந்தமான்** ஊழிய தேவைக்காய் ஜெபியுங்கள். மார்ச் மாதம் எனது மகன் உபவாச ஜெபம் நடைபெறும் இடத்தை பார்வையிடவும், அங்குள்ள ஊழியர்களை கலந்து ஆலோசிக்கவும் சென்றபோது ஒரு நபருக்கு போகவர கட்டணம் ரூபாய் 7950 ஆனது. தற்சமயம் ரூபாய் 10,000 ஆகிறது. 5 பேர் பயணப்பட ரூபாய் 50,000 தேவை. தயவுசெய்து இதற்காகவும் ஜெபிக்க உங்களை அன்பாய் கேட்கிறேன்.

7. ஊழியத்திற்கு சொந்த வாகனம்: வருகையின் தூதன் ஊழியத்திற்கென்று, காலஞ்சென்ற பாஸ்டர் **S. தேவதாசன்** அவர்கள் காலம் முதல் இதுவரைக்கும் வாகனம் இல்லாதிருக்கிறது. இப்பொழுது ஊழியத்திற்கென்று ஒரு வாகனம் தேவை என உணருகிறோம். ஓட்டுனர் தவிர 7பேர் அமரக்கூடிய மூன்று வரிசை இருக்கை உள்ள பழைய அல்லது புது வாகனம் நமக்குத் தேவை. தயவாய் ஜெபியுங்கள்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உங்கள் சகோதரன்,
வெஸ்லி தேவதாசன்
(WESLEY DEVADASON)

ஆசிரியர் : 04652 403295
உதவி : 94897 40295
ஜெப உதவி : 94980 30295
அலுவலகம் : 95432 21008
காலை 10.00 முதல் 1.00 வரை
மாலை 02.00 முதல் 6.00 வரை
(ஞாயிறு விடுமுறை)

பத்திரிகை செய்திகள்

தூத்துக்குடி - நாசரேத் திருமண்டல தேர்தலில் தகராறு
பெண் அடித்துக் கொலை
10 பேர் கும்பல் வெறிச்செயல்

மெஞ்ஞானபுரம், ஜூன் 18

தூத்துக்குடி - நாசரேத் திருமண்டலத்தில் கல்விளை சேகர அளவிலான தேர்தல் நேற்று நடந்தது. இந்த தேர்தலில் சேகர கமிட்டி உறுப்பினர் பதவிக்கு மெஞ்ஞானபுரம் அருகே உள்ள பிள்ளைவிளையைச் சேர்ந்த ஷீபா என்பவரும், அதே ஊரைச் சேர்ந்த வசந்தி என்பவரும் போட்டியிட்டனர். வசந்திக்கு ஆதரவாக அவருடைய தங்கை சாந்தி குடும்பத்தினர் செயல்பட்டனர்.

இதற்கிடையே தேர்தலில் ஷீபா வெற்றி பெற்றார். அவரது வெற்றியை ஷீபாவின் ஆதரவாளர்கள் நேற்று இரவு சுமார் 8 மணி அளவில் கொண்டாடினர். அப்போது சாந்தியின் மகன் டேனியல் அந்த வழியாக வந்தார். டேனியலை கண்டவுடன் ஷீபாவின் ஆதரவாளர்கள் கோஷம் எழுப்பி தகராறு செய்ததாக கூறப்படுகிறது. அப்போது டேனியலை சிலர் தாக்க முயன்றுள்ளனர்.

இதைக்கண்ட சாந்தி டேனியலை தாக்க முயன்றவர்களிடம் தட்டிக்கேட்டார். அப்போது அங்கிருந்த ஒரு கும்பல் சாந்தி, டேனியல் ஆகிய இருவரையும் சரமாரியாக தாக்கியது. இதில் சாந்தி மயங்கி விழுந்தார். அந்த கும்பல் அங்கிருந்து தப்பிச் சென்றது. அங்கிருந்தவர்கள் சாந்தியை மீட்டு நாசரேத்தில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கு சாந்திக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. அப்படி இருந்தும் சாந்தி பரிதாபமாக இறந்தார். தகவல் அறிந்த மெஞ்ஞானபுரம் போலீசார் சம்பவ இடத்துக்கு சென்று பார்வையிட்டனர்.

இது தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தினர். முதல் கட்ட விசாரணையில், 10 பேர் கொண்ட கும்பல் சாந்தியை அடித்துக் கொலை செய்ததாக கூறப்படுகிறது. தூத்துக்குடி - நாசரேத் திருமண்டல தேர்தலில் பெண் அடித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தூத்துக்குடி மாவட்டம் முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

Registered with the Registrar of News Paper
For India under R.N.I. TN TAM 11967/'67
Date of Publication : 27th of Every month

If un-delivered please return to:
VARUKAYIN THOOTHAN
Nagercoil - 629 001. INDIA.
Mobile: 9543221008

To